**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 173/2019**
**U/s. 505(1b),353 ,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 6 (LW.9 )**

| | | |
|---|---|---|
| **Name** | **:** திரு**.** விஜயகுமார் **(Io)** | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | **:** | **Age : /2026** |

**1-3** எதிரிகள் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி,வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.173/2019 08.5.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.29**

**<u>முதல் விசாரணை:</u>**

**1,** நான் கடந்த 13.02.2019 ம் தேதி தஞ்சாவூர் நகர மேற்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பெண் உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ் செல்வி என்பவர் குற்ற எண் 100/2019 சட்டபிரிவுகள் 505(1b),353,506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் எதிரிகளை கைது செய்து, திரேக பரிசோதனை நிலைய காவலில் வைக்கப்பட்டவர்களை விசாரணை செய்துவிட்டு இவ்வழக்கின் சம்பவயிடமான தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் கும்பகோணம் மார்கமாக செல்லும் பேருநது நிறுக்குமிடம் சென்று சாட்சிகள் முகமது அப்பாஸ் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்பு சம்பவயிடம் மற்றம் அதன் சுற்று புறம் ஆகியவற்றை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **பார்வை மகசர் அசாஆ 4, மாதிரி வரைப்படம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் சாட்சிகள் பெண் உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. அண்ணாதுரை திரு. விஸ்வநாதன் மற்றும் பெண் முதல்நிலை காவலர் திருமதி. நிறைமதி மற்றும் திரு தாமஸ் த/பெ தாசன் தியாகராஜன் த/பெ வெங்கட்ராமன், துரைராஜ் த/பெ துரைசாமி மற்றும் முகமது அப்பாஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி 13.02.2019 ம் தேதி 14.00 மணிக்கு மூவரையும் கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றையதினமே எதிரிகளிடமிருந்து கைபற்றபட்ட தடயபொருள்களை கைப்பற்றுதல் மகசரில் கைபற்றி நீதிமன்றத்தில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், வழக்கின் தடயபொருள்களை படிவம் 91 மூலம்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சிபி எண் 84/2019 ஆகும். **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 6 , படிவம் 91 அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாபொ–1 துண்டு பிரசுரங்கள் (எண்ணிக்கை –20 ), சாபொ–2 மூன்று கட்டைகள் ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது 27.02.2019 ம் தேதி மேற்படி பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் பசா1–பசா8 வரையானவர்களை எந்த தேதியில் விசாரிக்கப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். 13.02.2019 ல் விசாரித்தேன். இவ்வழக்கின் ஆவணங்களான பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் ஆகியவற்றில் உதவி ஆய்வாளர் என்பதில் உதவி என்பது அடித்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைப்படம் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்பது பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் என்னால் தயார் செய்யபடவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் தான் தயார் செய்தார். உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ் செல்வி என்னுடைய விசாரணையில் தடயபொருள்களை கைப்பற்றியதாக கூறவில்லை என்றால் சரியல்ல.

2. 13.02.2019 ல் கைப்பற்றபட்ட தடயபொருளானது நீதிமன்றத்திற்கு 20.05.2019 ல் அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். கால தாமத்திற்ககான காரணம் வழக்கில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் 20.02.2019 ல் வழக்கு சொத்தானது நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்டு திருப்பபட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையானது 27.02.2019 ல் தாக்கல் செய்யபட்டதா என்றால் சரிதான். ஆனால் 20.08.2019 ல் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளை எந்த இடத்தில் வைத்து கைது செய்தததாக குறிப்பு இல்லை என்றால் காவல்நிலையத்தில் வைத்து கைது செய்தேன். தீ வைத்து கொளுத்துவதற்கான எந்த தடயபொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். துண்டு பிரசுரங்களில் என்ன குறிப்பிடப்பட்டிருந்து என்று உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வியிடம் விசாரித்தேனா என்றால் கார்ப்பரேட் காவி பாசிசத்தை எதிர்த்து போராட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அரசுக்கு எதிரான வார்த்தைகள் எதுவும் அதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது அரசு்க்கு எதிரான வார்த்தைகள் தான்.

3. இவ்வழக்கில் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் துண்டு பிரசுரங்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எந்ததெந்த எதிரியிடமிருந்து எந்ததெந்த தடயபொருள்கள் கைப்பற்றபட்டது என்று குறிப்பிட்டு எதுவும் கைப்பற்றுதல் மகசரில் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றபட்ட துண்டு பிரசுரங்கள் காவல்நிலைய புள்ளி விவரத்திற்காக இருப்பில் இருந்த தடயப்பொருளை கொண்டு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் என்றால் தயார் செய்யபடவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரில் கண்ட தமிழ்நாடு போக்குவரத்து மையத்தில் இருந்தவர்கள் , அருகில் கடை வைத்திருந்தவர்கள் யாரையும் சாட்சிகளாக விசாரணை செய்தீர்களா என்றால் விசாரித்தேன் ஆனால் அவர்கள் வாக்குமூலம் கொடுக்க முன்வரவில்லை. யார் யாரை விசாரித்தேன் என்று ஞாபகமில்லை. இந்த விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் பார்வை மகசரில் கடையில் உள்ள நபர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளாக சொல்லப்படும் நபர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதிற்கு முன்பே கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன நாள், நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் கொரனா காலம் என்றால் இல்லை. எதிரிகள் வெளியூர் நபர்கள் என்பதால் கொரனா காலத்தில் பேருந்து நிலையத்தில் நின்றவர்கள் மீது முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஓப்பம் - கனிமொழி**,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.